நாமக்கல் மாவட்டக் கருவூல அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை:திரு.கி.சுப்புலட்சுமி.பி.எஸ்.சி.,

---

செ.மு.4746/2019/அ2 நாள்: .12.2019.

பொருள்:பணியமைப்பு - கருவூலம் மற்றும் கணக்குத்துறை - நாமக்கல் மாவட்டக் கருவூல அலகு - திரு.ந.கார்த்திகேயன் என்பவர் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் 2015-2016 ஆண்டு தொகுதி IV மூலம் இளநிலை உதவியாளராக தெரிவு - பணிநியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை:1.செயலர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் சென்னை-03 அவர்களின் கடித எண்.5453/PSD-H2/2017 நாள்:19.09.2017.
2.முதன்மை செயலர்/ஆணையர், கருவூலக் கணக்குத்துறை சென்னை அவர்களின் செ.மு.ந.க.எண்.40595/2017/சி3 நாள்:13.10.2017.
3.இவ்வலுவலக செ.மு.ந.க.எண்.4231/2017/அ2 நாள்:09.11.2017.
4.அரசாணை(நிலை)எண்.191 பொதுத்துறை நாள்:01.02.1962.

***

**ஆணை**

பார்வை 1-ல் காணும் கடிதத்தின்படி திரு.N.கார்த்திகேயன் என்பவர் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் இளநிலை உதவியாளராக தெரிவு செய்யப்பட்டு, பார்வை 2 மற்றும் 3-ல் காணும் செயல்முறை ஆணையின்படி 10.11.2017 முற்பகல் மாவட்டக் கருவூல அலகு, சார்நிலைக் கருவூலம் திருச்செங்கோட்டில் இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்டு தற்போது பணியிட மாறுதலில் சார்நிலைக் கருவூலம் பரமத்தியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் தனியரின் பணியினை பார்வை 4-ல் காணும் அரசாணையின் படி பணியில் சேர்ந்த நாளான 10.11.2017 முற்பகல் முதல் கீழ்காணும் நிபந்தனைகளுடன் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

1.தனியர் பணியேற்ற நாள் முதல் தொடர் மூன்றாண்டு பணிகாலத்தில் இரண்டாண்டு பணிகாலம் தகுதிகாண் பருவ காலமாக நிர்ணயிக்கப்படுகிறது.

2.தனியர் தகுதிகாண் பருவ காலத்தில் அரசு விதிமுறைகளினபடி நிர்ணக்கப்பட்டுள்ள துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதுடன் அரசு அலுவலர்களுக்கான பவானிசாகர் அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்யவேண்டும்.

...2

3. சென்னை உயர்நீதிமன்றம்/சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை, கிளை ஆகியவற்றில் பணிவரன்முறை மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி-IV, 2015-2016 தெரிவு சம்பந்தமாக நிலுவையில் உள்ள வழக்குகளின் முடிவின் படியும், பின் நாளில் அரசால் பிறப்பிக்கப்படும் ஆணைகளுக்கு ஏற்ப இவ்வாணை மாறுதலுக்கு உட்பட்டதாகும்.

தொடர்புடைய அலுவலர் மேற்காணும் பதிவுகளை தனியரின் பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(கையொப்பம்) 2/12/19

கருவூல அலுவலர்,
நாமக்கல்.

பெறுநர்:
திரு. ந. கார்த்திகேயன்,
இளநிலை உதவியாளர்,
சார்நிலைக் கருவூலம், பரமத்தி.

நகல்:
உதவி கருவூல அலுவலர்,
சார்நிலைக் கருவூலம்,
பரமத்தி.

Endt RC. 555/2019/அ

சார்நிலைக் கருவூலம்
பரமத்தி

//நகல் சார்பு செய்யப்படுகிறது//

நாள்: 13.12.2019

பெறுநர்
திரு. ந. கார்த்திகேயன்,
இளநிலை உதவியாளர்,
சார்நிலை கருவூலம்,
பரமத்தி.

உதவி கருவூல அலுவலர்
பரமத்தி.
13/12/19